IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

STC.NO.1408/2019

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | MEIGNANAM |
| FATHER'S NAME | : | GOVINDHAN |
| VILLAGE | : | VELLERI |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 6th day of November 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது ஊரை சேர்ந்தவர். 2014 வருடம் எனது ஊரின் ஊராட்சி தலைவராக இருந்தபோது கடந்த 10.12.2014 அன்று மதியம் 12.00 மணியளவில் நான் தட்டப்பாறை கங்கையம்மன் கோவிலிடம் இருந்தபோது ஊரில் தண்ணீர் வராததால் பிரச்சனை இருந்தது சம்பந்தமாக நான் BDO கணகராஜ் என்பவரிடம் அது சம்பந்தமாக பேசிகொண்டிருந்போது BDO மோட்டார் இருக்கும் இடத்தில் காட்டசொல்லி கேட்டதால் அங்கு சென்றுகொண்டிருந்தபோது ஏகாம்பரம் என்பவர் நீ என்னடா மோட்டார் இருக்கும் இடத்தை காட்டுவது என்று தெவிடியா பையா உன்னை காலிபண்ணாம விடமாடடேன் என்றும், நீ எப்படி நிர்வாகம் செய்து வெளியே போவ என்று பார்க்கிறேன் என்று சொல்லி கொண்டே எனது மார்பில் எட்டி உதைத்துவிட்டார். பின்னர் எனது ஊரை சேர்ந்த சரவணன் என்பவர் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது மறுநாள் போலிசார் என்னை வந்து விசாரணை செய்து புகார்வாக்குமூலம் பதிவு செய்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையததுான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.